செ.வெ.எண்.05 நாள்.02.11.2017.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஸ்காட் பொறியில் கல்லூரியில் சுகாதார வாக்கெடுப்பு குறித்து தலைமை ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்சி பட்டறையினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் துவக்கி வைத்தார்.

---------

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஸ்காட் பொறியியல் கல்லூரியில் தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் சுகாதார வாக்கெடுப்பு குறித்து தலைமை ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்சி பட்டறை துவக்க விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு ஒருநாள் பயிற்சி பட்டறையினை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது–

ஆசிரியர்களின் பணி மிக முக்கியமான ஒன்றாகும். தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் திருநெல்வேலி மாவட்டம் திறந்தவெளி கழிப்பிடம் இல்லா மாவட்டமாக அறிவிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளில் ஆசிரியர்களின் பங்கும் அவசியமான ஒன்றாகும். தூய்மைப் பணியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளி மாணவ, மாணவிகளிடையே சுகாதார வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இதன் மூலம் தனிநபர் கழிப்பறைகள் இல்லாத வீடுகள் கணக்கெடுத்தல், கழிப்பறை இருந்தும் பயன்படுத்தாத வீடுகள், தண்ணீர் பற்றாக்குறை உள்ள வீடுகள் கணக்கெடுத்தல் உள்ளிட்ட முக்கிய கணக்கெடுப்புகள் செய்யப்படவுள்ளது. நமது மாவட்டம் தூய்மையான மாவட்டமாக திகழ்ந்திட அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

ஊரக வளர்ச்சி முகமை மற்றும் யுனிசெப் இணைந்து நமது மாவட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகளிடையே சுகாதார வாக்கெடுப்பு நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது. இது குறித்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. நமது மாவட்டத்தில் 3 மாதங்களுக்கு முன்பு 1 இலட்சம் வீடுகளில் கழிப்பறைகள் இல்லாமல் இருந்தது. தற்போது இரண்டு மாதங்களில் 65 ஆயிரம் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 35 ஆயிரம் கழிப்பறைகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. இம்மாத இறுதிக்குள் அனைத்து இல்லங்களிலும் தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டி முடிக்கப்படும். இது குறித்த கணக்கெடுப்புகளை நடத்திட பள்ளி மாணவர்களை கொண்டு சுகாதார வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இதன் மூலம் அனைத்து இல்லங்களிலும் கழிப்பறைகள் உள்ளதா என்பது குறித்தும், கழிப்பறைகள் பயன்பாட்டில் உள்ளதா, தண்ணீர் வசதி உள்ளதா என்பது குறித்தும், பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் உள்ளதா என்பது குறித்தும் உண்மை நிலை கண்டறியப்படும். வாக்கெடுப்பு எவ்வாறு நடத்துவது என்பது குறித்து இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து மாணவர்களையும் இவ்வாக்கெடுப்பில் பங்கேற்க செய்ய வேண்டும். மாணவர்களுக்கு டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பள்ளி வளாகத்தினை சுத்தமாக பராமரிக்க வேண்டும். என பேசினார்.

இந்தநிகழ்ச்சியில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பத்துரை, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள், தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.